# தனிப்பட்ட அவசர தேவைகளிற்காக ஒவ்வொருவருடமும் 10 நாட்கள் வரை லீவு எடுப்பதற்கு சகல தொழிலாளர்களுக்கும் உரிமை உண்டு.

## இந்த 10 நாட்கள் லீவில் முதல் 2 லீவு நாட்களிற்கு உங்களது முதலாளி கட்டாயமாக சம்பளம் வழங்கவேண்டும்.

இந்த தொழில் பாதுகாப்புடன் கூடிய லீவானது எமது மற்றும் எம்அன்பிற்குரியவர்களினது நலனில் அக்கறை எடுப்பதற்கான அவசியத்தினை அங்கீகரிக்கின்றது.

நீங்கள் சுகயீனமுற்றிரிப்பின், அல்லது காயமடையும் பட்சத்தில் இந்த லீவினை பயன்படுத்தலாம். அத்துடன் உங்களது குடும்பத்தில் எவராவது மரணமடையும் சந்தர்ப்பத்தில் அல்லது சுகவீனமடையுமிடத்து அல்லது காயமடையுமிடத்து அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ அவசரதேவை நிமிர்த்தம் அல்லது வேறு ஏதேனும் அவசர தேவைகளிற்காக இந்த லீவினை எடுக்கலாம். குடும்ப அங்கத்துவராக, உங்கள் வாழ்க்கைத்துணை (கனவன் / மனைவி), பிள்ளைகள், பெற்றோர்கள், பெற்றோரின் பெற்றோர்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், திருமணவழி-மைத்துனர்கள், வளர்ப்புக்குடும்பம், மற்றும் உங்களிடம் தங்கிவாழ்பவர்கள் ஆகியோர் கருதப்படுவார். அவசர லீவை நீங்கள் எடுப்பதாயின் உங்களுடைய முதாலாளிக்கு இயன்றளவு விரைவில் அறிவிக்கவேண்டும். இந்த **லீவினை எடுப்பதனால் உங்களது முதலாளி அதை மறுக்கவோ அல்லது உங்களை பயமுறுத்தவோ முடியாது. அப்படி ஏதாவது** உங்களிற்கு நேர்ந்தால், உதவிக்கு எங்களை அழையுங்கள்!

வேலை ஆரம்பித்து ஒரு கிழமையின் பின்னர் இந்த சம்பளத்துடன் (2 நாட்கள்) கூடிய அவசர லீவினை நீங்கள் எடுக்கலாம். இந்த அவசர லீவினை உங்கள் சுகவீனம் அல்லது உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் சுகவீனம் காரணமாகவோ நீங்கள எடுக்கும் பட்சத்தில் உங்கள் முதலாளி இதனை நிரூபிப்பதற்காக மருத்துவரின் கடிதத்தினை கேட்கமுடியாது.

அவசர லீவு பற்றிய மேலதிக தகவல்களிற்கு எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள் அல்லது எங்களை தொடர்புகொள்ளுங்கள். அனைத்து சேவைகளும் இலவசம். உங்களது அனைத்து அழைப்புகளும் இரகசியமாகப்பேணப்படும்.

**416-531-0778**
**Toll Free: 1-855-531-0778**
**WorkersActionCentre.org**

*Tamil*
*August 2018*

# ALL WORKERS NOW HAVE THE RIGHT TO TAKE UP TO 10 DAYS OF PERSONAL EMERGENCY LEAVE EACH YEAR.

# THE FIRST 2 DAYS OF THIS LEAVE MUST BE PAID BY YOUR EMPLOYER.

This job-protected leave recognizes that we need to be able to take care of ourselves and our loved ones.

You can use this leave when you are sick or injured. You can also use this leave for a death in the family or when your family is sick, injured or has a medical emergency or other urgent matter. Family includes your spouse, kids, parents, grandparents, grandchildren, siblings, in-laws, stepfamily, and dependents.

Let your boss know as soon as possible when you need to take a personal emergency leave day. **Your boss cannot say no or threaten you for taking this leave.** If this happens to you, call us for help!

You can take a **paid** Personal Emergency Leave day after one week in a new job. If you take a leave day because you or a family member is sick, your boss **cannot** ask you for a medical note from the doctor.

For more information about Personal Emergency Leave, visit our website or call us. All calls are free and confidential!

**416-531-0778**
**Toll Free: 1-855-531-0778**
**WorkersActionCentre.org**